# TIST

# CHEZHUMAI© செழுமை©



Tel. 044-22246844, No. 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, 600061 E-Mail prabakar@tist.org



September 2003


## Prabakar and Adhi Attend TIST Seminar for 7 Countries Held in Morogoro, Tanzania

**By Sarah Fraser, I4EI**

TIST held a very exciting seminar in Morogoro, Tanzania from 21st July until 1st August 2003 with over 60 members from 7 countries - Tanzania, Uganda,

## மொரகோரோ, தான்சேனியாவில் பிராபாகரும், ஆதியும் ஏழு நாடுகள் ஒன்று சேர்ந்த TIST கருத்தரங்கில் பங்கேற்றனர்

**சரா பிரேசர் (I4EI) எழுதியது**

TIST டான்சேனியாவின் மொரகோரோவில் ஜுலை 21ந் தேதியிலிருந்து ஆகஸ்ட் 1ந் தேதி வரை கொண்ட 7



Adhi and Prabakar working with other participants from various countries at the TIST Seminar held in Morogoro, Tanzania
டான்ஸானியாவின் மொரகோரோவில் நடைபெற்ற டிஸ்ட் கருத்தரங்கத்தில் பிரபாகரும், ஆதியும் பல்வேறு நாடுகளிலிருந்து பங்கேற்ற உறுப்பினர்களுடன் இணைந்து செயலாற்றுவது

*continued from page 1*

Kenya, South Africa, India, UK and USA! Project manager of TIST in India Mr. Prabakar Srinivasan and member of a Small Group in Vedal village Mr. Adhikesavan Ekambaram were among the participants in the seminar. Participants shared and worked on best practices for small group meetings and forming new small groups in their communities as well as best practices for starting and maintaining nurseries, tree planting and conservation farming. The seminar also included HIV/AIDS education and a call to action in the participants' communities.

## Morogoro TIST Seminar – An Invaluable Experience

**By Adhikesavan Ekambaram and Prabakar Srinivasan**

It is impossible for one to comprehend the experience of participating in the TIST Seminar, held in Morogoro, Tanzania, without having participated in it. It was a wonderful seminar where every participant was able to learn from the best practices of other TIST participants worldwide and also share and teach their own expertise and experiences in a truly interactive manner. The seminar not only focussed on tree planting but also on how TIST participants can benefit in other areas such as Education and Health. The seminar was conducted in such an interactive manner that there was never a dull moment, and it felt like watching a good action movie, except that now you were acting in it as well!! Every session had something new and exciting to learn from, providing us with new tools to bring the benefits of TIST to all areas.

On the very first day of the seminar we all introduced ourselves to others participants and started with the Promises for the seminar. In all we had 14 Promises made starting from - *building relationships while learning together* to that of *how small groups can enhance your life and your community*. Its remarkable that we had participants with 20 different spoken languages in the seminar but the entire seminar was held in English with translation done in Swahili and at times in Tamil too. By the end of the seminar, every participant was well versed with the various issues covered in the seminar, which was the result of shared experiences and expertise of the participants. Here are some of the areas on which participants were interactively trained:

- How to form small groups
- How to work in small groups
- How to recruit group members
- How small groups can be accountable
- Advantages of paired sharing
- Characteristics of a good Servant and Leader

நாடுகளிலிருந்து அதாவது டான்சேனியா, உகாண்டா, கென்யா, கிழக்கு ஆப்பிரிக்கா, இந்தியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவிலிருந்து வந்த 60 உறுப்பினர்களைக் கொண்டு ஒரு கலக்கல் கருத்தரங்கம் நடத்தியது. இந்தியாவின் திட்ட மேலாளர் திரு. பிரபாகர் ஸ்ரீநிவாசன் மற்றும் வேடல் கிராம சிறு குழு உறுப்பினர் திரு.ஆதிகேசவன் ஏகாம்பரமும் மற்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து இந்த கருத்தரங்கில் பங்கேற்றனர். பங்கேற்ற உறுப்பினர்கள் தாங்கள் கடைப்பிடித்த நல்ல செயல் முறைகளை - அதாவது சிறு குழு கூட்டங்களின் போதும் புதிய சிறு குழுக்களை அமைக்கும்போது நாற்றுப்பண்ணை ஆரம்பிக்கும் போதும் அதை பராமரிக்கும் போதும், மரங்கள் நடும் போதும் மற்றும் அவற்றை பாதுக்காப்பான விவசாயம் செய்யும் போதும் கடைப்பிடிக்கும் நல்ல முறைகளை மற்ற உறுப்பினர்களுடன் பகிர்ந்துக் கொண்டனர். மேலும் இந்த கருத்தரங்கில் எச்.ஐ.வி / எய்ட்ஸ் குறித்த பயிற்றுவிப்பும் தங்கள் சமூகத்தில் அப்படி ஏற்படின் அதை எதிர் கொண்டு செயல்பட வேண்டிய முறைகளைப் பற்றியும் நடந்தேறியது.

## மொராக்கோரா TIST கருத்தரங்கு ஓர் உன்னத அனுபவம்

**ஆதிகேசவன் ஏகாம்பரம் மற்றும் பிராபாகர் ஸ்ரீநிவாஸன் எழுதியது.**

டான்ஸானியாவின் மொரோகோராவில் நடைபெற்ற TIST கருத்தரங்கை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. அதை உணரத்தான் முடியும். அது ஒரு அற்புதமான கருத்தரங்காகும். உலகம் முழுவதிலிமிருந்து வந்திருந்த உறுப்பினர்கள் தாங்கள் கடைப்படிக்கும் முறைகளையும் திறம்பட உணர்த்தியும் மேற்கொள்ளும் முறைகளை விளக்கியும் ஒருவருடன் ஒருவர் ஒருங்கிணைந்து பகிர்ந்துக் கொண்டனர். கருத்தரங்கில் மரங்களின் நடவுமுறைகளை பற்றி மட்டுமின்றி TIST பங்கேற்பாளர்கள் கல்வி மற்றும் ஆரோக்கியம் போன்ற மற்ற துறைகளின் உதவியுடன் எவ்வாறு நன்மை அடைய முடியும் என்பது குறித்து தெளிவான கருத்துக்களை எடுத்துரைத்தனர். கருத்துக்களை ஒருவரோடொருவர் கலந்து பரிமாறிக் கொண்ட இந்த சுவாரசியமான கருத்தரங்கில் ஒரு நிமிடம் கூட சலிப்பு தராமல் நடந்த விதம் ஒரு நல்ல விறுவிறுப்பான ஒரு திரைப்படம் போல பட்டிருந்தது. அதை எல்லோரும் பார்வையிட்டவில்லை, பங்கேற்கவும் செய்தார்கள். ஒவ்வொரு கூட்டத் தொடர்விலும் புதிய செய்திகளை கற்றுக் கொண்டோம். மேலும், TIST-ன் பயன்களை மற்ற எல்லைகளிலும் விரிவடையச் செய்யும் புதிய யுக்திகளையும் அறிந்துக் கொண்டோம்.

முதல் நாள் அறிமுக படலத்துடன் ஆரம்பித்து அதைத் தொடர்ந்து கருத்தரங்கு உறுதி மொழி எடுத்துக் கொண்டோம். மொத்தம் 14 உறுதி

- How to help a Leader have a Servant heart
- Crop rotation
- Sustainable agriculture
- Nursery development
- Seed selection
- Alternatives to fire wood usage
- Drip irrigation
- HIV AIDS - Its impact on the society, agriculture and economy.
- We had also learnt on the best ways to communicate with others and sharing experiences using the Internet.
- We also had the tremendous experience of hearing from prominent speakers and experts such as Dr. Chande, a renowned environmentalist, Mr.Larvale who is a Journalist, and Professor Mukasha.

We would like to thank the facilitators of the seminar (especially Mr. Ben Henneke and Mrs. Vannesa Henneke) for imparting the knowledge that we gained as participants and for the excellent design and implementation of the seminar. Even though the nearly 70 participants were from 7 different countries, the tremendous interactive nature of the 2 week seminar brought us all very close together in an amazing bond of love, affection and a will to do good through TIST. This clearly exemplified the power of the Small Group approach used by TIST.

# Grow Trees! Get Rains!

**By Elumalai Arumugam- Asst. Agricultural officer**

Recently, in Tamil Nadu with the advent of the TIST Program, poor & deprived villagers of a small village named Aandiseruvallur had started undertaking the process of planting trees not only to earn extra income for themselves, but also to reforest their area, bring rains and promote sustainable economic development. Almost all the people in this village are now actively participating in this program by forming about 30 TIST Small Groups which have already planted almost 2,500 trees and seedlings. The efforts of Mr. Prabakar, Mrs. Sreelatha Prabakar, Mrs. Kokila Kumar, Mr. Chidambaram and other TIST staff in promoting this program have been tremendous.

TIST has also paid the Small Groups in Aandiseruvallur cash incentives for their tree and seedling plantings. Recognizing my expertise as an agricultural officer and my tremendous knowledge of the various localized issues, TIST has given me the privilege of coordinating the groups' administrative tasks such as group registration, collection of Small Group Monthly Reports (SGMR), providing training to groups, opening small group savings accounts and making payments to groups in Aandiseruvallur and

*continued from page 2*

மொழிகள் கலந்து பயலும்போது நல்லுறவு வளர்தலிலிருந்து எவ்வாறு சிறு குழுக்கள் நம் வாழ்வையும், சமூகத்தையும் உயர்த்தும். 20 விதமான மொழிகளை கொண்டவர்களையும் பங்கேற்ற இந்த கருத்தரங்கின் தனிச்சிறப்பு குறிப்பிடத்தக்கது. ஆனால் கருத்தரங்கம் முழுவதும் ஆங்கில மொழியிலேயே நடைபெற்றது. ஸ்வாஉறியிலியிலும் மற்றும் அவ்வப்போது தமிழிலும் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டது. கருத்தரங்கின் முடிவில் பங்கேற்றவர்கள் அனைவரும் திறமையும் அனுபவமும் கலந்து ஒருங்கிணைந்து பகிர்ந்துக் கொண்டதின் பயனாக கருத்தரங்கில் நடையுற்ற பல்வேறு வித செயல்முறைகளைப் பற்றி தெள்ளத் தெளிவாக அறிந்துக் கொண்டோம். இதில் பங்கேற்றவர்கள் பயிற்சி பெற்ற சில துறைகள் இதோ-

- சிறு குழுக்கள் அமைப்பது எப்படி
- சிறு குழுக்களில் செயலாற்றுவது எவ்வாறு.
- குழு உறுப்பினர்களை வேலையில் அமர்த்துவது எப்படி
- சிறு குழுக்கள் பொறுப்பேற்பது எப்படி
- இணைந்து பங்கேற்பதின் பயன்கள்
- நல்ல தொண்டனும் நல்ல தலைவனுக்கான பண்புகள்.
- தலைவருக்கு தொண்டர் உள்ளம் கொள்ள உதவி புரிதல்.
- சுழற்சி முறையில் பயிரிடுதல்
- நீடித்த விவசாயம்
- நாற்றுப்பண்ணை முன்னேற்றம்
- விதைகளை தேர்ந்தெடுத்தல்
- விறகு உபயோகத்தித்திற்கு மாற்று சொட்டு நிர்ப்பாசனம்
- எச்.ஐ.வி / ஏய்ட்ஸ் - சமூகம், விவசாயம் மற்றும் பொருளாதாரத்தில் இதன் தாக்கம்.
- நல்ல முறையில் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளுதலும் மற்றும் இணையதளத்தின் மூலம் அநுபவங்களை பகிர்ந்துக் கொள்ளுவதையும் நாங்கள் அறிந்துக் கொண்டோம்.
- டாக்டர் சண்டே, சுற்றுப்புற சூழல் பாதுகாவலரின், பத்திரிக்கையாளர் திரு.லார்வலே மற்றும் பேராசிரியர் திரு.முகாஷாவின் திறமை வாய்ந்த முக்கிய பேச்சாளர்களின் பேச்சைக் கேட்டுக் கொள்ள ஒரு மிகப் பெரிய அநுபவம் கிடைத்தது.

இந்த கருத்தரங்கை மிக நல்ல முறையில் அமைத்துக் கொடுத்த, துணை தந்து ஊக்குவித்து அதன் மூலம் பங்கேற்றவர்களுக்கு பல தகவல்கள் அளித்ததற்கும், முன்னேறஉதவியவர்களுக்கு (திரு.பென், திருமதி வனீசா மற்றும் குழுவினர்களுக்கு) எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறோம். 7 நாடுகளிலிருந்து சுமார் 70 உறுப்பினர்களைக் கொண்டு இணைந்து செயலாற்ற வைத்த அந்த பண்பு இந்த 2 வார கருத்தரங்கில் எங்கள் எல்லோரையும் மிக அன்னியோனியமாக ஒருங்கிணைந்தது, அன்போடும் பாசத்தோடும் பின்னிப் பிணைத்து, TIST-ன் மூலம் நல்லதையே செயலாற்ற வேண்டும் என்ற

continued from page 3

other villages. I have also provided my voluntary support to Prabakar and the rest of TIST staff in recruiting TIST groups in other newer villages such as Kottavakkam, Melpadavur, Seruvallur-Mettucolony etc. TIST had also invited me to attend the training seminar held in Morogoro, Tanzania. Unfortunately I missed out on this tremendous oppurtunity since I was unable to get the required travel documents in time to make the trip. However, I am extremely grateful to TIST for this generous invitation.



Elumalai helping a Small Group in Andiseruvallur to establish their nursery
ஆண்டிசிறுவள்ளூரில் திரு.ஏழுமலை சிறு குழுக்கள் தங்கள் நாற்றுப் பண்ணை துவங்க உதவுகிறாா

TIST brings to our deforested and drought prone area an opportunity and potential to bring about tremendous benefits and development through reforestation, conservation farming, community education, new technology and most importantly bringing people together by working in Small Groups for a common goal. I request you all to join and support TIST and plant lots of trees to improve our land cover and bring rains back to this once fertile and prosperous part of Tamil Nadu.

# Neem Trees

**By Prabakar Srinivasan and Elumalai Arumugam- Asst. Agricultural officer**

Several TIST Small Groups in Tamil Nadu are planting

எண்ணத்தையும் அளித்தது. TIST அணுகுமுறையில் இதுவே சிறு குழுக்கள் வலிமையை உணர்த்தும் தெளிவான எடுத்துக்காட்டு.

# மரம் வளர்ப்பீர் மழை பெறுவீர்

**ஏழுமலை ஆறுமுகம் - துணை விவசாய அதிகாரி எழுதியது**

அண்மைக் காலத்தில் தமிழ்நாட்டில் TIST திட்டத்தின் வருகையால் வருமையிலும் வாட்டத்திலமுள்ள ஆண்டிசிருவள்ளூர் கிராம வாசிகள் மரங்கள் நடும் இத்திட்டத்தில் ஈடுபட்டு தங்களுக்கு கூடுதல் வருமானத்திற்காகவும் மேலும் வனம் புதுப்பித்திலிலும் மழை வருகைக்காகவும் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் இந்த மரங்கள் நடும் செயல் திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஏறக்குறைய மொத்த கிராம வாசிகளும் இந்த திட்டத்தில் மும்முறமாக ஈடுபட்டு 30 TIST சிறுகுழுக்கள் அமைத்து 2500 மரங்கள் மற்றும் சான்றுகள் நட்டுள்ளனர். திரு பிரபாகர், திருமதி ஸ்ரீலதா பிராபாகர், தீருமதி கோகிலா குமார் திரு சிதம்பரம் மற்றும் TIST ஊழிர்கள் இந்த திட்டத்தின் வளர்ச்சிக்காக மிகவும் உழைத்தனர்.

ஆண்டிசிறுவள்ளூர் சிறு குழுக்களுக்கு மரம் மற்றும் நாற்றுக்கள் நட்டதற்கு TIST பணம் அளித்தது. விவசாயம் மற்றும் வேறு சில உள்ளூர் துறைகளில் தேர்ச்சி பெற்றுள்ளதால் TIST என்னை ஒருங்கிணைப்பாளராக அமர்த்தியுள்ளது. சிறு குழுக்களின் நிர்வாக பணிகளில் அதாவது குழு பதிவு செய்யவும். சிறு குழுக்களின் மாதாந்திர அறிக்கைகளை சேகரிக்கவும், சிறு குழுக்களுக்கான பயிறிசியளிக்கவும், சேமிப்பு கணக்கு துவங்கவும் ஆண்டி சிறுவள்ளூர் சிறு குழுக்களுக்கும் மற்றும் வேறு கிராமங்களுக்கு பணம் வழங்கவும், என்னை அமர்த்தியுள்ளது. கொட்டவாக்கம், மேல்படவூர், சிறுவள்ளூர் மேட்டுக்காலனி போன்ற மேலும் புதிய சில கிராமங்களில் TIST குழுக்கள் அமைக்க மனமார்ந்த ஒத்துழைப்பளித்துள்ளேன். டான்சேனியாவின் மோரக்கோரே கருத்தரங்கம் கலந்துக் கொள்ள TIST எனக்கும் அழைப்பு விடுத்தது. எதிர்ப்பாராத விதமாக குறித்த தருணத்தில் பயண பத்திரங்கள் அளிக்க முடியாததால் இந்த பயணத்தை மேற்கொள்ள முடியவில்லை. TIST என்னை அழைத்ததற்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

TISTன் இந்த திட்டத்தை நாங்கள் அனுசரிப்பதால் எங்கள் வறட்சி நிலத்தில் நல்ல முன்னேற்றங்கள், வனப்புதுப்பித்தல், பாதுகாப்பு விவசாயம், சமூக வளர்ப்புப் பயிற்சி, புதிய தொழில் நுட்பம் மற்றும் முக்கியமாக சிறு குழுக்களாக ஒன்று கூடி ஒரு பொது நோக்கத்திற்காக உழைப்பது போன்ற நல்ல சில முன்னேற்றங்கள் அடைந்துள்ளோம். நான் எல்லோரையும் இந்த TIST திட்டத்தில் சேர்ந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். TIST இத்திட்டத்திற்கு உங்கள் ஒத்துழைப்பளித்து நிறை மரங்கள் நட்டு அதன் மூலம்

Neem seedlings and trees. You may be aware of the many benefits of the Neem tree. Here are some:

- Neem leaves turns into manure for the land
- Neem leaves can be fodder for the cattle
- Neem leaves and seeds when crushed & mixed in water can be used as pesticide.
- Dried Neem leaves when mixed with Urea enhances the effectiveness of Urea.
- Neem oil kills insects.
- Agricultural tools can be made out of Neem wood
- Neem wood can be used as fuel and for construction of homes.
- Farmers using fertilizers should be aware that Neem leaves contains N.P.K in the ratio of 2.5, 0.6, 2.0
- White ants do not affect the land near neem trees
- Neem leaves if mixed in ratios of 2% to 10% with Rice, Maize and other cereals could protect them from various insects and pests and increase their shelf life by upto a year.
- 1 Kg of Neem leaves can be ground well, mixed in 20 liters of water and can be filtered and used for sprinkling on vegetable crops preventing the vegetables from being attacked by pests. Root knots which appear in Tomatoes, Ladysfinger (Okra) and Brinjal (Eggplant) plants will also be controlled.
- A more dilute mixture of Neem leaves and water may also be used for drinking
- Neem can provide an answer to many diseases. Traditionally Neem products have been used against heat-rash, boils, wounds, jaundice, leprosy, skin disorders, stomach ulcers, chicken pox, etc. Modern research also confirms Neem's curative powers in case of many diseases and provides indications that Neem might in future be used much more widely.

# TIST News Bulletin

**By Chidambaram, TIST India Coordinator**

As of August 21st, the TIST project in Tamil Nadu has registered 170 groups from the following 15 villages: Vedal, Seruvallur, Aandiseruvallur, Seruvallur-Mettucolony, Melpadavur, Jambhodai, Melapulam, Peruvalayam, Molachur, Nandhimedu, Chitoor, Sokandhi, Kanthur, Keeranallur and Kottavakkam. All of these groups have planted more than 20,000 trees and seedlings. Groups are also regularly submitting

*continued from page 4*

நிலப்பரப்பை மேம்படுத்தி, மழை வருகையை தூண்டி முன்பொரு காலத்தில் செழுமையாக இருந்த அந்த தமிழ்நாட்டை மீண்டும் உண்டாக்குவோம்.

## வேப்ப மரங்கள்

**ஏழுமலை ஆறுமுகம் - துணைவிவசாய அதிகாரி மற்றும் பிராபாகரும் எழுதியது**

தமிழ் நாட்டில் பல TIST சிறு குழுக்கள் வேப்ப மரங்களையும், நாற்றுகளையும் நடவு செய்கின்றனர். இதன் பயன்கள நீங்களும் அறிந்திருப்பீர்கள். இதோ அவற்றில் சில.

- வேப்ப இலைகள் நிலத்திற்கு எருவாக மாறுகிறது.
- வேப்ப இலைகள் கால்நடைகளுக்கு ஜீவனமாகிறது.
- வேப்ப இலைகள் மற்றும் விதைகளை நசுக்கி தண்ணீருடன் கலந்தால் பூச்சிக் கொல்லியாக பயன்படுகிறது.
- உலர்ந்த வேப்ப இலைகள் யூரியாவுடன் கலந்தால் யூரியாவின் வீரியம் கூடுகிறது.
- வேப்ப எண்ணை பூச்சிகளை அழிக்கிறது.
- வேப்ப மரத்தால் விவசாய கருவிகள் தயாரிக்கலாம்.
- விறகாகவும், வீடு கட்டவும் வேப்ப மரம் உதவும்.
- விவசாயிகள் வேப்ப இலைகளில் என்.பி.கே.2.0 0.6 2.0 என்ற விகிதத்தில் அமைந்திருப்பது அறிந்ததே.
- வேப்ப மரம் அருகிலுள்ள நிலங்களில் செல் அரிக்காது.
- வேப்ப இலைகளை 2% முதல் 10% வரையில் அரிசி, சோளம் மற்றும் வேறு பல தானியங்களுடன் கலந்து வைத்தால் 1 வருடம் வரை தானியங்கள் பூச்சி வராமல் பாதுகாத்து வைப்பில் வைத்துக் கொள்ளலாம்.
- 1 கிலோ வேப்ப இலைகளை அரைத்து 20 லிட்டர் தண்ணீரில் கரைத்து இந்த வடிகட்டிய கரைசலை காய்கறி பயிர்களில் தெளித்து அவைகளை பூச்சிகளின் தாக்குதலிலிருந்து தடுக்கலாம். தக்காளி, வெண்டை, கத்தரி செடிகளில் தோன்றும் வேர் முடிகளையும் இந்த கரைசலை தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- குடிக்கும் நீரிலேயே இந்த வேப்ப இலைகளை அரைத்து நீரில் கலந்து கரைசலை தெளித்து குன்றி விட்டு பயன்படுத்தலாம்.
- நிறைய நோய்களுக்கு வேம்பு ஓர் நல்ல மருந்தாகும். பண்டை காலத்தில் வழிவழியாக வேனல் கட்டி, கொம்புளம், கட்டிகள், காமாலை, தொழுநோய், தோல் வியாதிகள், வயிற்றுப்புண் அம்மை நோய் போன்றவற்றிற்கு வேம்பு பயன்படுகிறது. அண்மைகால ஆய்வுகள் மூலம் வேம்பு பல நோய்களை குணமாக்குகிறது என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. மேலும் வரும் காலங்களில் இதன் உபயோகம் அதிகரிக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

*continued from page 5*

Small Group Monthly Reports to TIST coordinators. About 40 groups have opened savings accounts at their local post offices and the remaining groups are urged to open their accounts immediately. TIST has also been making quarterly payments to groups that have submitted 3 consecutive SGMRs by issuing vouchers that are payable at the post office where the group has opened its savings account. Please contact Prabakar, Chidambaram, Elumalai, Ranganathan, Adhikesavan or other TIST staff or coordinators if you have any questions about any of the TIST procedures.

## TIST செய்தி மடல்

**திரு. சிதம்பரம், TIST ஒருங்கிணைப்பாளர்**

ஆகஸ்ட் 21ம் தேதி வரை TIST திட்டத்தில் தமிழ்நாட்டில் 170 குழுக்கள் 13 கிராமங்களிலிருந்து அதாவது வேடல், சிறுவள்ளூர், மேல்படவூர், ஜம்போடை, மேலாபுரம், பெருவளையம், மொளச்சூர், நந்திமேடு, சித்தூர், ஸோகண்டி, காந்தூர், கீரநல்லூர் மற்றும் கொட்டவாக்கம் கிராமங்களிலிருந்து பதிவு ஆகியுள்ளது. இந்த குழுக்கள் இதுவரை 20,000 ம் மேல் மரங்களும் நாற்றுக்களுமாக நடவு செய்துள்ளன. TIST ஒருங்கிணைப்பாளர்களிடம் இக்குழுக்கள் தவறாமல் அவர்களின் மாதாந்திர அறிக்கை சமர்ப்பிக்கிறது. சுமார் 40 குழுக்கள் அவர்களின் கிராம தபால் நிலையங்களில் சேமிப்பு கணக்கை துவக்கியுள்ளார்கள். மற்ற குழுக்களையும் அவர்களின் சேமிப்புக் கணக்கை விரைவில் துவக்க ஊக்கிவிக்கிறார்கள். அடுத்தடுத்த 3 முறை மாதாந்திர அறிக்கை அளித்துள்ள குழுக்களுக்கு TIST காலாண்டு ஊக்கத்தொகையை பற்றுச் சீட்டு அளித்து அவற்றை குழுக்கள் சேமிப்பு கணக்கு துவக்கியுள்ள அஞ்சலகத்தில் செலுத்தி பணம் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்துள்ளது. TIST செயல்முறைகளை குறித்து மேலும் தகவல்களுக்கும் அல்லது கேள்விகள் இருப்பின் நீங்கள் திரு.ப்ரபாகர், திரு.சிதம்பரம், திரு. ஏழுமலை, திரு.ரங்கநாதன், திரு.ஆதிகேசவன் அல்லது TIST ஒருங்கிணைப்பாளர்களை அணுகவும்.